**செய்தி வெளியீடு எண் : 023** **நாள் : 04.01.2023**

## செய்தி வெளியீடு

மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் திரு. கே.என்.நேரு அவர்கள் தலைமையில் இன்று (04.01.2023) தலைமைச் செயலகத்தில் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் சார்பில் 2021–22 மற்றும் 2022–23 ஆகிய நிதியாண்டுகளில் மானிய கோரிக்கையின் போது மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் சட்டமன்றத்தில் 110 விதியின் கீழ் அறிவித்த அறிவிப்புகள், மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள் சட்டமன்றத்தில் அறிவித்த அறிவிப்புகள், மாண்புமிகு நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் சட்டபேரவையில் அறிவித்த அறிவிப்புகளுக்கு ஒதுக்கப்பட்ட நிதி ஆதாரங்களின் அடிப்படையில் மாநகராட்சிகள், நகராட்சிகள், பேரூராட்சிகள், சென்னை குடிநீர் வாரியம், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், சென்னை நதிகள் சீரமைப்பு அறக்கட்டளை, தமிழ்நாடு நீர் முதலீட்டு நிறுவனம், தமிழ்நாடு நகர்புற உட்கட்டமைப்பு நிதி சேவைகள் நிறுவனம், தமிழ்நாடு நகர்புற நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனம் ஆகியவற்றில் செயல்படுத்தப்பட்டு வரும் திட்டங்களின் முன்னேற்றம் குறித்த ஆய்வு கூட்டம் நடைப்பெற்றது.

இக்கூட்டத்தில் அரசாணைகள் வெளியிடப்பட்டு மேற்கொள்ளப்பட்டு வரும் பணிகளின் முன்னேற்றம் குறித்தும், அரசாணை வெளியிடுவதற்கு தேவையான நிதி ஆதாரங்களை பெறுவதற்காக மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கை குறித்தும் ஆய்வு செய்யப்பட்டது. மேலும், விரிவான திட்ட அறிக்கைகளை தயார் செய்து நிர்ணயிக்கப்பட்ட கால அளவில் திட்டங்களை செயல்படுத்துவது தொடர்பாக ஆய்வு செய்யப்பட்டது. மேலும், கடந்த 20 மாதங்களில் மேற்கொள்ளப்பட்ட திட்டப்பணிகளின் தற்போதைய நிலை குறித்தும் நிர்ணயிக்கப்பட்ட கால அளவிற்குள் அனைத்து திட்ட பணிகளையும் நிறைவு செய்து பொது மக்களின் பயன்பாட்டிற்கு கொண்டு வருவதற்கான நடவடிக்கை குறித்தும் ஆய்வு செய்யப்பட்டது.

இக்கூட்டத்தில் கூடுதல் தலைமைச் செயலாளர், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, திரு. சிவ் தாஸ் மீனா, இ.ஆ.ப., தமிழ்நாடு நகர்புற உட்கட்டமைப்பு நிதி சேவைகள் நிறுவனத்தின் (TUFIDCO) தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர்/ கூடுதல் தலைமைச் செயலாளர், முனைவர் மு.சாய்குமார்., இ.ஆ.ப., தமிழ்நாடு நகர்புற நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனத்தின் (TNUIFSL) தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர்/ முதன்மைச் செயலாளர், மரு.சி.ஸ்வர்ணா, இ.ஆ.ப., தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய மேலாண்மை இயக்குநர், திரு. வ.தட்சிணாமூர்த்தி, இ.ஆ.ப., நகராட்சி நிர்வாக இயக்குநர், திரு.பா.பொன்னையா,இ.ஆ.ப., பேரூராட்சிகளின் இயக்குநர், திரு. கிரண் குராலா, இ.ஆ.ப., பெருநகர சென்னை மாநகராட்சியின் ஆணையாளர் (பொறுப்பு) திரு. சங்கர்லால் குமாவத், இ.ஆ.ப., தமிழ்நாடு நீர் முதலீட்டு நிறுவனத்தின் (TWIC) முதன்மை நிர்வாக அலுவலர், திரு. பி.விஷ்ணு சந்திரன், இ.ஆ.ப., மற்றும் உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**********

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in